செ.வெ.எண். 36 நாள் - 20.10.2020

# நீலகிரி மாவட்டம், குன்னூர் இன்கோசர்வ்அலுவலகத்தில் கோவிட்19 சோதனை நெறிமுறைகள் இணையதளத்தினை (www.nilgiriscovidcare.in) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், முதன்மைச் செயலாளர் / தலைமை செயல் அலுவலர், இன்கோசர்வ் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

---

நீலகிரி மாவட்டம், குன்னூர் இன்கோசர்வ் அலுவலகத்தில் இன்று (20.10.2020) கோவிட்19 சோதனை நெறிமுறைகள் இணையதளத்தினை (www.nilgiriscovidcare.in) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், முதன்மைச் செயலாளர் / தலைமை செயல் அலுவலர், இன்கோசர்வ் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

"கோவிட்19 தொடர்பான சோதனை நெறிமுறைகள் அடங்கிய இணையதளத்தினை (www.nilgiriscovidcare.in) இன்று தொடங்கி வைத்துள்ளோம். இந்த இணையதளம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கிளீன் குன்னூர் அமைப்புடன் இணைந்து உருவாக்கியுள்ளார்கள். இத்தளத்தில் கோவிட் என்றால் என்ன? கோவிட்19 சாதாரண அறிகுறிகள் என்ன? எப்படி பரவுகிறது? பரவுதலின் போது நமது பொறுப்புணர்வு என்ன? கோவிட் பரவலை தடுக்க மாவட்ட நிர்வாகம் எடுத்துள்ள முயற்சிகள் என்னென்ன? என்பது தொடர்பாக அனைத்து விவரங்களும் உள்ளது. அதுமட்டுமல்லாமல் இந்நோயிலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் எவ்வாறு பாதுகாத்து கொள்வது? பொதுமக்கள் தங்களின் சோதனை முடிவுகளை ஆன்லைனில் பெறுவது தொடர்பான பல்வேறு விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்திற்குள் வருவதற்கான இபாஸ் லிங்க் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசுத்துறைகளின் கூட்டு முயற்சியால் கொரோனா தொற்று விகிதம் சற்று குறைந்துள்ளது. சிகிச்சை முடிந்து வீடு திரும்புவர்களின் சதவீதம் 90% ஆக உள்ளது. தற்போது தொற்று பாதிப்பும் குறைந்துள்ளது. தொற்று குறைந்தாலும், பொதுமக்களுக்கு பரிசோதனைகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 1,35,000 பொதுமக்களுக்கு கொரோனோ தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக கர்ப்பினிகளுக்கு சிறப்பு மருத்துவம் எவ்வாறு வழங்குவது என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது." என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது, "மாவட்டத்தில் கொரோனா தாக்கம் சிறிதளவு குறைந்துள்ளது. மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்கள் நடத்தி, கொரோனா தொற்று புள்ளி விவரங்களை தெரியப்படுத்திக்கொண்டே இருக்கிறார். மாவட்டத்தில் கொரோனா தொற்று விகிதம் குறைந்தாலும், பரிசோதனை எண்ணிக்கையினை அதிகப்படுத்தி கொண்டிருக்கிறோம். தொற்று ஏற்பட்டவர்களில் யாரையெல்லாம் மருத்துவமனையில் அனுமதிக்கலாம். யாரையெல்லாம் வீட்டு கண்காணிப்பில் வைக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அளவில் நமது நீலகிரி மாவட்டத்தில் தொற்று விகிதம் குறைவாக உள்ளது. இன்னும் கூட பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி, பொது இடங்களில் சமூக இடைவெளியினை பின்பற்றி, முககவசங்கள் அணிந்து, கைகளை அடிக்கடி கழுவி தொடர்ந்து விழிப்புணர்வோடு இருந்தாலும், அரசு தெரிவிக்கும் வழிமுறைகளை முழுமையாக பின்பற்றினாலும், நமது மாவட்டத்தை கொரோனா இல்லா மாவட்டமாக மாற்ற முடியும்." என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், சுகாதாரத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது, இணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பழனிசாமி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, மருத்துவமனை மேலாளர் மரு.ரவீந்திரன், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.இரியன் ரவிக்குமார், கிளீன் குன்னூர் அமைப்பு நிர்வாகிகள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்